08.12.2016

தினமணி

**ஆயுள் குறைக்கும் ஆயில்!**



ரீபைண்ட் ஆயில் என்றாலே சுத்திகரிக்கப் பட்ட எண்ணெய் என்றுதான் நினைத்து வருகிறோம்.ஆனால் ரீபைண்டு ஆயில் சுத்தமாக உயிர் சத்துகளே இல்லாத சக்கை எண்ணெய் ஆகும்.

ரீபைண்ட் ஆயில் தயாரிக்கும் முறை பற்றி தெரிந்து கொள்ளுங்கள். மில்லில் இருந்து பெறப்பட்ட எண்ணெய்யில் காஸ்டிக் சோடாவை சேர்த்து கொதிக்க வைத்து முதலில் அதிலிருந்து சோப்பு எடுக்கிறார்கள். பிறகு அதிகம் இருக்கும் காஸ்டிக் அமிலத்தின் மூலம் அகற்றி நீயூட்ரலைஸ் செய்து அதில் இருக்கும் வாசனையை அறவே நீக்கிவிடுகிறார்கள். பிறகு அதை சால்வெண்ட் எக்ஸ்ட்ராக்சன் மூலம் பிரித்து எடுக்கிறார்கள். இதை எல்லாம் நேரில் பார்த்தால் நம்மில் பலருக்கு சாப்பிடவே பிடிக்காது.

திரைமறைவில் நடக்கும் இந்த வேலைகள் எல்லாம் மக்களுக்கு தெரியாத காரணத்தால் 'சுத்தம் செய்யப்பட்ட எண்ணெய்' என்று நினைத்து ரீஃபைண்ட் ஆயிலை உபயோகித்து கொண்டு இருக்கிறார்கள். உண்மையில் ரீஃபைண்ட் ஆயில் என்பது அடர்த்தி இல்லாத தண்ணீர் போன்ற ஒரு திரவம்.



சமையலுக்கு இதை பயன்படுத்தும் போது சூடு தாங்காமல் உருக்குலைந்து உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் ஒரு ரசாயன கலவையாக மாறுகிறது. எண்ணெய் விஷமாக மாறிவிட்டதால் இன்று மக்கள் பலவிதமான நோய்களுக்கு உள்ளாகி சிகிச்சைகள் எடுத்துக் கொள்வதற்காக பெரிய தொகைகளை செலவழித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

நமக்கு வரும் நோய்களுக்கு எல்லாம் சுற்றுச்சூழல் மாசுபட்டு இருப்பது தான் காரணம் என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றி கொள்கிறோம். முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு கடந்த 60-70 ஆண்டுகளில் நோய்கள் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டு இருக்கிறது.

இதற்கான காரணங்களில் முக்கியமான இடத்தை பிடித்து இருப்பது ரீஃபைண்ட் ஆயில். யோசிச்சு பாருங்க இவ்வளவு கெடுதலான ஒரு பொருளை நாம் அன்றாடம் உணவில் பயன்படுத்தி,நாமே விலை கொடுத்து நம் ஆரோக்கியத்தை பாழ்படுத்திக் கொள்கிறோம்.

**எந்த எண்ணெய் தான் வாங்குவது?**

ரீபைண்ட் செய்யாத நல்லெண்ணெய், கடலை எண்ணெய்,தேங்காய் எண்ணெய் வாங்கி பயன்படுத்தலாம். இதைத் தானே நம்ம முன்னோர்கள் பயன்படுத்தினார்கள். கொழுப்பு உள்ள எண்ணெய் பயன் படுத்தினால் மாரடைப்பு, ரத்தக்கொதிப்பு வரும்,அதிக எடை கூடும் என நினைக்கிறீர்களா? எள் எண்ணெய் (நல்லெண்ணெய்), கடலை எண்ணெய்,தேங்காய் எண்ணெய் வாங்கலாம் என்றால் விலை அதிகமாக இருப்பதாக நினைக்கிறீர்களா? ஒரு லிட்டர் கடலை எண்ணெய் 170 ரூபாய், ஒரு லிட்டர் ரீபைண்ட் ஆயில் 85 ரூபாய், அப்போ ரீபைண்ட் ஆயில் வாங்குனா உங்களுக்கு பாதி பணம் அதாவது 85 ருபாய் மிச்சம் என்று பார்க்காதீங்க! டாக்டருக்கு செலவு செய்வதையும் பாருங்க!அதனால் விலைக்கேற்றபடி குறைத்து பயன்படுத்துங்க.!

நல்ல தரமான பொருளை வாங்கி பயன்படுத்தி ஆரோக்கியமாக வாழலாமே!!! ஆரோக்கியம் தானே மிக பெரிய செல்வம். எண்ணெய் விலையை நாம் நினைத்தால் குறைக்கலாம். அது எப்படி? நாம் எந்த பொருளை விரும்புகிறோமோ அதை வியாபாரிகள் தயாரித்து கொடுக்க தயாராக இருக்கிறார்கள். எதை அதிகமாக வாங்குகிறோமோ அதன் தயாரிப்பும் அதிகரிக்கும். தயாரிப்பு அதிகரித்தால், விலை குறையும்.

தரமான பொருளை அதிகமாக வாங்கினால் அதன் தயாரிப்பு எண்ணிக்கை அதிகரிப்பதன் மூலம் தரமான பொருளை நியாயமான விலையில் வாங்க முடியும். மட்டமான பொருளை விற்கிறார்களே என்று வியாபாரிகளை குறை சொல்லி பயனில்லை. நாம் எதை கேட்கிறோமோ, எதை அதிகம் வாங்குகிறோமோ அதை தானே அவர்கள் விற்பார்கள்.

நன்றி - அஹமத் இஸ்மாயில், ஜிஎஸ்ஜி

**இன்றைய மருத்துவ சிந்தனை** (08.12.2016) **ஏலக்காய்**



ஏலக்காய், தனியா, நெருஞ்சில் - தலா 100 கிராம் எடுத்துப் பொடி செய்து கொள்ளவும். இதில் ஒரு ஸ்பூன் பொடியைப் பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் சிறுநீரகக் கற்கள் கரையும்.

ஏலக்காய், சீரகம் -50 கிராம் எடுத்து எலுமிச்சைச் சாற்றில் (100 மில்லி) ஊறவைத்து காயவைக்கவும். இதில் இரண்டு கிராம் அளவு எடுத்து தேனோடு கலந்து சாப்பிட்டால் தலைவலி , மயக்கம் குணமாகும்.

ஏலக்காய் , வெள்ளரி விதை - தலா 100 கிராம் எடுத்துப் பொடி செய்து , காலை மாலை இருவேளையும் இரண்டு கிராம் அளவுக்குச் சாப்பிட்டால் , நீர் அடைப்பு , கல் அடைப்பு அனைத்தும் குணமாகும்.

ஏலக்காய் போட்டுக் கொதிக்கவைத்த தண்ணீரில் வாய் கொப்பளித்தால் , வாய் நாற்றம் , பல் அரணை , ஈறுகளில் ஏற்படும் புண் போன்றவை குணமாகும்.

ஏலரிசி , சுக்கு , கிராம்பு , சீரகம் - தலா 50 கிராம் எடுத்துப் பொடிசெய்து கொள்ளவும். இதில் இரண்டு கிராம் அளவு எடுத்து தினமும் இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால், குடல் புண் , வயிற்று வலி போன்றவை குணமாகும்.

ஏலக்காய் ,ஆவாரம் பூ , சுக்கு - தலா 100 கிராம் எடுத்துப் பொடி செய்து கொள்ளவும். இதில் ஐந்து கிராம் எடுத்து அரை லிட்டர் தண்ணீரில் போட்டு பாதியாகச் சுண்டக் காய்ச்சிக் குடித்தால் இதய நோய் , இதய பலவீனம் போன்றவை குணமாகும்.

**கோவை பாலா**


இயற்கை வாழ்வியல் நல ஆலோசகர் மற்றும் Foot and Hand Reflexologist

Cell : 96557 58609

தி இந்து

தமிழால் இணைவோம்

**உருவானது 'வர்தா' புயல்: ஆந்திர கடலோர பகுதிகளில் கனமழை வாய்ப்பு**




செயற்கைக்கோள் படம் - நேரம்: வியாழக்கிழமை காலை 9.30 மணி | இந்திய வானிலை ஆய்வு மையம்

தென் கிழக்கு வங்கக் கடலில் புயல் உருவானது. 'வர்தா' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் புயல் காரணமாக, ஆந்திர கடலோரப்

பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு கனமழை வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் கிழக்கு வங்கக் கடலில், விசாகப்பட்டினத்திலிருந்து 1,210 கிலோ மீட்டர் தூரத்தில் மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி, பின்னர் புயலாக மாறும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணி நிலவரப்படி, தென் கிழக்கு வங்கக் கடலில், விசாகப்பட்டினத்திலிருந்து 1,060 கிலோ மீட்டர் தூரத்தில் 'வர்தா' புயல் மையம் கொண்டிருப்பதாக, இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அதிகாரபூர்வ இணையதளத்தில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் புயல் மேலும் வடமேற்கு திசையை நோக்கி நகர்வதால், கடும் புயலாக மாறி, அடுத்த 4 நாட்களுக்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் கனமழை பெய்யும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் நிலை மற்றும் நகரும் போக்கு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தென் தமிழக கடலோரப் பகுதியில் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும். சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் ஏற்கெனவே அறிவித்திருந்தது.

இந்த நிலையில், வர்தா புயலின் தாக்கத்தால் கடலோரப் பகுதிகள் உள்ளிட்ட வடதமிழகத்தில் மழை வாய்ப்பு இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வாரத்தில் வலுவிழந்த நிலையில் கரையை கடந்த புயலுக்கு 'நடா' (பெருந்தன்மை) என்று ஓமன் நாடு பெயர்

சூட்டியிருந்தது. தற்போது உருவாகியுள்ள புயலுக்கு உருது மொழியில் 'வர்தா' என பாகிஸ்தான் நாடு பெயர் சூட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**காற்றழுத்த தாழ்வுப் பகுதி புயலாக மாறும்: தமிழகம், புதுவையில் மழைக்கு வாய்ப்பு**



கோப்பு படம் | படம்: ம. பிரபு


வங்கக் கடலில் மையம் கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி புயலாக மாறும். அதே நேரத்தில் தென் தமிழக கடலோரப் பகுதியில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சியால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன், நேற்று நிருபர் களிடம் கூறும்போது, “தென் கிழக்கு வங்கக் கடலில், விசாகப்பட்டினத்திலிருந்து 1,210 கிலோ மீட்டர் தூரத்தில் மையம் கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறக்கூடும். அதனைத் தொடர்ந்து வரும் 24 மணி நேரத்தில் புயலாகவும் மாற வாய்ப்புள்ளது. இது வடமேற்கு திசையை நோக்கி நகரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் நிலை மற்றும் நகரும் போக்கு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், தென் தமிழக கடலோரப் பகுதியில் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி நிலவி வருகிறது. இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஓரிரு இடங் களில் லேசான மழை பெய்யக் கூடும். சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

புதன்கிழமை காலை 8.30 மணி யுடன் முடிவடைந்த 24 மணி நேரத் தில் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் 4 செ.மீ., திருநெல்வேலி மாவட்டம் பாபநாசத்தில் 1 செ.மீ. மழை பதிவாகியுள்ளது” என்றார்.

**தமிழகத்துக்கு மழை தருமா 'வர்தா'?- தமிழ்நாடு வெதர்மேன் கூறும் 6 தகவல்**




செயற்கைக்கோள் புகைப்படம்.

வங்கக்கடலில் புதிதாக உருவாகியுள்ள 'வர்தா' புயலால் தமிழகத்துக்கு மழை வருமா என்பது குறித்து வானிலை ஆர்வலர் தமிழ்நாடு வெதர்மேன் தனது கணிப்புகளை நம்முடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

1. வர்தா என்ற பெயரை பாகிஸ்தான் நாடு வழங்கியுள்ளது.

2. தென் கிழக்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள 'வர்தா' புயல் காரணமாக, ஆந்திர கடலோரப் பகுதிகளில் அதிக மழைக்கு வாய்ப்புள்ளது.

3. வர்தா புயல், வரும் 12-ம் தேதி இந்தப் புயல் நெல்லூருக்கும் காக்கிநாடாவுக்கும் இடையே கரையைக் கடக்கும். கரையை கடக்கும்போது வலுவிழந்தே கடக்கும்.

4. தற்போது இந்தப் புயல் நகரும் அதே திசையை நோக்கி முன்னேறி கரையைக் கடக்குமானால் தமிழகத்தில் சிறிதும் மழை பெய்ய வாய்ப்பில்லை.

5. ஆனால், ஒருவேளை இந்தப் புயல் மேற்கு நோக்கி நகர்ந்து நெல்லூர் - சென்னைக்கு இடையே கரையைக் கடந்தால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்புள்ளது.

6. வர்தா புயல் கரையைக் கடந்ததும் மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை வங்கக் கடலில் உருவாகும்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**வேர்க்கடலை சாகுபடியில் தீவிரம் காட்டும் விவசாயிகள்**

திருமுக்கூடல் : வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவிற்கு இதுவரை பொழியாததை தொடர்ந்து, பல்வேறு கிராமங்களில், விவசாய நிலங்களில் நவரை பருவ வேர்க்கடலை பயிரிடுவதில், விவசாயிகள் தீவிரம் காட்ட துவங்கி உள்ளனர்.

வடகிழக்கு பருவமழை துவங்கி, ஒரு மாதம் முடிந்த நிலையில், இதுவரை எதிர்பார்த்த அளவிற்கு மழை பொழியாததால், விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இதனால், ஏரி பாசனத்தை நம்பி, நெல் பயிரிட்டு பாசன வசதி பெற தேவையான தண்ணீர் கிடைப்பதில், விவசாயிகளுக்கு ஏற்பட்டு உள்ளது.

இதை தொடர்ந்து, பெருநகர், இளநகர், களியாம்பூண்டி, அம்மையப்பநல்லூர், பென்னலூரார், மானாம்பதி, காரியமங்கலம், சேத்துப்பட்டு உள்ளிட்ட பகுதிகளில், நவரை பருவ வேர்க்கடலை பயிர் செய்வதில், விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். தற்போது பொழிந்துள்ள மழையால், அடுத்த ஒரு மாதத்திற்கு நிலத்தில் ஈரம் இருக்கும். மேலும், பனிக்காலமும் துவங்கி உள்ளதால், நிலத்தில் ஈரப்பதத்தை தக்கவைக்க உதவுகிறது. எனவே, தற்போதைய காலநிலைக்கு, இப்பகுதியில் நவரை பருவ வேர்க்கடலை சாகுபடி செய்வதே சரியானதென கருதி பணியில் ஈடுபட்டுள்ளோம். பெருநகர் கிராம விவசாயிகள்

**கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவை மீண்டும் துவக்கம்**

திருவாலங்காடு: திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை, கடந்த, 1ம் தேதி, காலை, மாவட்ட ஆட்சியர் சுந்தரவல்லி துவக்கி வைத்தார். அப்போது, அவர் நடப்பாண்டில், 2.50 லட்சம் டன் கரும்பு அரவை இலக்கும், ஒரு நாளைக்கு, 2,500 டன் கரும்பு அரவை செய்யப்படும் என பேசினார். ஆனால், அன்று மாலையே கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள ஒரு இயந்திரத்தின் உதிரி பாகம் ஒன்று பழுதடைந்தது. இதனால் கரும்பு அரவை நிறுத்தம் செய்யப்பட்டது. இதையடுத்து, ஆலை நிர்வாகம் பழுதடைந்த இயந்திரத்தின் உதிரி பாகம் கொள்முதல் செய்ய பெங்களூரு சென்றனர். நேற்று முன்தினம் இரவு, உதிரி பாகம் கொண்டு வந்து பொருத்தப்பட்டு, சோதனை ஓட்டம் நடத்தினர். நேற்று முதல், நடப்பாண்டிற்கான கரும்பு அரவை மீண்டும் துவங்கப்பட்டது.

**மழைநீர் கால்வாயை சீரமைக்க கோரிக்கை**

பொன்னேரி : கோரை புற்கள் சூழ்ந்தும், ஆக்கிரமிப்புகளாலும் பராமரிப்பு இன்றி கிடக்கும் மழைநீர் கால்வாயை சீரமைக்க

வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர். பொன்னேரி அடுத்த, கிருஷ்ணாபுரம் கிராமத்தில் இருந்து வெள்ளோடை கிராமம் வரை, மழைநீர் தேக்கி வைக்கும் கால்வாய் உள்ளது. மழை காலங்களில், இந்த கால்வாயில் தேங்கும் மழைநீர் விவசாயத்திற்கு பயன்பட்டு வந்தது. மேற்கண்ட கால்வாய் பராமரிப்பின்றி கிடப்பதால், மழைநீர் தேக்கி வைக்க முடியாமலும், விவசாயத்திற்கு பயன்படாமலும் கிடக்கிறது. கால்வாய் முழுவதும் கோரை புற்களும், பாலை செடிகளும் சூழ்ந்து கிடக்கின்றன. வீட்டு மனைகளுக்காக, கால்வாயை மூடி சாலை அமைத்து வருகின்றனர்.

அங்குள்ள குடியிருப்புகள், கால்வாயை ஒட்டிய பகுதிகளில் செடிகள் வளர்த்து ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு உள்ளன. மேற்கண்ட கால்வாயில் உள்ள புதர்களை அகற்றி சீரமைத்தால், அதில் தேங்கும் மழைநீர் விவசாயத்திற்கு பயன்படுவதுடன் கால்நடைகளின் குடிநீருக்கும் பயனுள்ளதாக அமையும். கால்வாயை ஒட்டியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, மழைநீர் கால்வாயை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**பூஜ்ஜியம் அளவை தொட்டது சிறுவாணி இனி, மழைத்துளி... மண்ணின் உயிர்த்துளி! தண்ணீர் கிடைப்பது 'போனஸ்' காலம்**

கோவை: கோவை மாநகராட்சி உள்ளிட்ட வழியோர கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் சிறுவாணி அணையின் நீர்மட்டம் பூஜ்ஜியத்தை தொட்டு விட்டது. இனி, தண்ணீர் கிடைப்பது, 'போனஸ்' காலமாகும். இம்மாதத்துக்குள் மழை பெய்யாவிட்டால், தண்ணீருக்காக கேரள அரசின் அனுமதிக்கு காத்திருக்க வேண்டும்.



கோவை மாநகராட்சி மற்றும் வழியோர கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும், சிறுவாணி அணை கேரள வனப்பகுதியில் உள்ளது. கடல் மட்டத்தில் இருந்து, 863.4 மீ., உயரத்தில் அணை அமைந்துள்ளது. அணையில், 15.1 மீ., உயரத்துக்கு, அதாவது, 878.5 மீ.,க்கு தண்ணீர் தேக்க முடியும். அணையில், 650 மில்லியன் கனஅடி தண்ணீர் தேக்க முடியும். வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை என, இரு பருவ காலத்தில் அணை நிரம்புவது வழக்கம். அணையில் இருந்து, அதிகபட்சமாக, 10.14 கோடி லிட்டர் குடிநீர் பொது வினியோகத்துக்காக வழங்கப்படுகிறது.

சிறுவாணி அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில், கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை சரியாக பெய்வதில்லை. இதனால், அணை ஒரு முறை கூட நிரம்பவில்லை. இந்தாண்டு, எதிர்பார்த்தளவுக்கு கூட மழை பெய்யாததால், அணையின் நீர்மட்டம், 11 மீ.,க்கு மேல் உயரவில்லை. அதற்கேற்ப, வடகிழக்கு பருவமழை பெய்யாமல் ஏமாற்றி வருவதால், கோடை காலத்தை போன்று, அணையின் நீர்மட்டம் சரிந்து, வறட்சி நிலை நிலவுகிறது. இதனால், அணையில் இருந்து தண்ணீர் எடுக்கும் அளவு கணிசமாக குறைக்கப்பட்டதால், இவ்வளவு நாட்களுக்கு குடிநீர் தேவைக்கு தண்ணீர் எடுக்க முடிந்தது.

வடகிழக்கு பருவமழை பெய்யாததால், சிறுவாணி அணையின், 15.1 மீ., உயரத்தில், 6ம் தேதி, 0.1 மீ., (ஒரு அடிக்கும் குறைவு) நீர்மட்டம் இருந்தது; 7ம் தேதி, அணையின் நீர்மட்டம்

பூஜ்ஜியத்தை தொட்டது. இதனால், நீர்புகு கிணற்றிலுள்ள வால்வுகளில் தண்ணீர் வெளியேறும் அளவும் குறைந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம், அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில், 10 மி.மீ., மழை பெய்தது. இதனால், நேற்று காலை நிலவரப்படி, அணையில், 0.1 மீ., என்றளவில் நீர்மட்டம் இருந்தது. நேற்று, 4.65 கோடி லிட்டர் தண்ணீர் வினியோகத்துக்கு எடுக்கப்பட்டது.

நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை இல்லை; இன்று மறுபடியும் நீர்மட்டம் பூஜ்ஜியம் அளவுக்கு வந்து விடும். இதனால், கோவைக்கு குடிநீர் வினியோகம் செய்வதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கூறுகையில், 'சிறுவாணியில், ஜூன் - செப்., வரையான நான்கு மாதத்தில், தென்மேற்கு பருவமழை தீவிரமடையவில்லை. அதன் விளைவால், அணையின் நீர்மட்டம் உயராமல் தடைபட்டது. வடகிழக்கு பருவகாலம் துவங்கினாலும், மழை தீவிர மடையவில்லை. அக்., மாதத்தில் இருந்து இதுவரை, நான்கு நாட்கள் மட்டுமே கனமழை பெய்தது. இதனால், அணை நீர்மட்டம் சரிந்து, பூஜ்ஜியம் அளவை தொட்டுள்ளது.

அணையின் நீர்புகு கிணற்றிலுள்ள நான்கு வால்வுகளும் நீர்மட்டத்துக்கு வெளியே உள்ளன. கடைசி வால்வின் கீழ்பகுதி வழியாக, குறைந்தளவு தண்ணீர் வெளியேறுகிறது. இம்மாதம் இறுதி வரையிலும், இதே அளவுக்கு தண்ணீர் கொடுக்க முடியும். அதற்குள், மழை பெய்யாவிட்டால், ஜன., மாதத்தில், கேரள அரசின் அனுமதி பெற்று, அணையில் இருக்கும் தண்ணீரை பம்ப் செய்ய வேண்டும். இதுபற்றி, மாநகராட்சி நிர்வாகத்துக்கும், அரசுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது' என்றனர்.

**சிறுவாணிக்கு மாற்று பில்லூர்!**

மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், 'மாநகரத்தில் சிறுவாணி குடிநீர், 26 வார்டுகளுக்கு வழங்கப்பட்டது. நீர்மட்டம் குறைந்ததால், 44, 45, 50, 51, 52, 54 ஆகிய வார்டுகளுக்கு பில்லூர் குடிநீர் வழங்கப்படுகிறது. சிறுவாணி தண்ணீர் கிடைக்காத போது,

மீதமுள்ள வார்டுகளுக்கும் பில்லூர் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறுவாணி திட்டத்தில் கிடைக்கும் தண்ணீர் அளவுக்கு ஏற்ப, பயனடையும் வார்டுகள் எண்ணிக்கை குறைக்கப்படும்' என்றனர்.

**தென்னை பயிரிட விவசாயிகளுக்கு…துளிரும் நம்பிக்கை! கைகொடுக்குமா கற்பக விருட்சம்**

பொள்ளாச்சி: காய்ப்பு திறனற்ற, கருகிய தென்னை மரங்கள் வெட்டப்படும் அதே நேரத்தில், கோவை மாவட்டத்தில் புதிதாக தென்னங்கன்றுகள் நடப்பட்டு, தென்னை சாகுபடி பரப்பளவும் அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் தென்னை வளர்ப்பில் முதலிடத்தில் இருப்பது கோவை மாவட்டம். அதிலும் பொள்ளாச்சி பகுதியில் தென்னை அதிகம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில், 83 ஆயிரத்து 750 எக்டர் பரப்பளவில், 14 லட்சத்துக்கும் கூடுதலான தென்னை மரங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, பொள்ளாச்சி, ஆனைமலை, நெகமம், திருப்பூர் மாவட்டம் உடுமலை பகுதிகள் தென்னை வளம் மிக்கதாக உள்ளது.

இப்பகுதி மரங்களிலிருந்து பறிக்கப்படும் இளநீர்கள் சென்னை, சிவகங்கை, செங்கல்பட்டு, ஆந்திரா உள்ளிட்ட பகுதிகளுக்கு லட்சக்கணக்கில் அனுப்பப்படுகின்றன. இதேபோல தேங்காயும் விற்பனை செய்யப்படுகின்றன. தவிர, தேங்காய் கொப்பரை தயாரிப்பு, எண்ணெய் உற்பத்தியும் அதிகளவில் நடக்கிறது. மேலும், தென்னை நார் உற்பத்தி, கயிறு தயாரிப்பு என, 400க்கும் மேற்பட்ட மையங்கள் செயல்படுகின்றன. தவிர, தென்னை நார்கள் மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களாக மாற்றப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நார் கழிவுகள் ரஷ்யா, சீனா நாடுகளுக்கு தொடர்ந்து ஏற்றுமதியாகி, அன்னிய செலாவணியை ஈட்டித்தருகின்றன.

**மழையின்றி சிக்கல்**

இச்சூழலில், கோவை மாவட்டத்தின் பல பகுதிகள் மழையின்றி, மழை மறைவு பகுதியாக மாறி வருகின்றன. நடப்பு ஆண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்துபோனது. தற்போது, வடகிழக்கு பருவமழைக்கு பதிலாக பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. இதனால், பல இடங்களில் கிணறுகள், நீர் நிலைகள் தண்ணீரின்றி வறண்டு, தென்னைகள் பல இடங்களில் காய்ந்து விட்டன. பயிர்கள் கருகுகின்றன; இந்நிலையை கண்டு விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர்.

இந்த நிலையிலும், பொள்ளாச்சி வடக்கு, கிணத்துக்கடவு ஒன்றியங்களில் வறட்சியான நிலங்களில், அதாவது இதுவரை விவசாயத்துக்கு பயன்படுத்தாத, பல ஏக்கர் நிலங்களை விலைக்கு வாங்கியவர்கள், ஆழ்குழாய் கிணறுகளை அமைத்து, சொட்டு நீர் பாசனத்தில் தென்னை சாகுபடி செய்துள்ளனர்.

நெகமம், சேரிபாளையம், சூலக்கல், ஆலாம்பாளையம், பெரும்பதி, கப்பினிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் புது தோப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனாலும், ஆலாம்பாளையம், கோப்பனுார்புதுார், செங்குட்டைபாளையம், அரசம்பாளையம், பனப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில், பல ஏக்கர் பரப்பளவு தென்னந்தோப்புகள் காய்ந்ததால், சமீபத்தில் வெட்டப்பட்டன. தற்போதும் வெட்டப்பட்டு வருகின்றன.

இதுபற்றி ஆலாம்பாளையத்தில் விசாரித்தபோது, மரங்கள் மிக உயரமாகி விட்டன. தவிர, இம்மரங்களில் காய்ப்பும் குறைந்துவிட்டது. ஆட்களும் கிடைக்காத நிலையில், இம்மரங்களால் கிடைக்கும் பலன் மிகக்குறைவு. அதனால், உயரமான மரங்கள் வெட்டப்பட்டு, அதே இடத்தில், புதிய ரக தென்னங்கன்றுகள் நடப்பட உள்ளது என்றார். மேலும், சில இடங்களில், லே - அவுட் அமைப்பதற்காக தோப்புகள் அழிக்கப்படுவதும் தொடர்கிறது.ஆனாலும், அழிக்கப்படும் தென்னைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புது இடங்களில் தோப்புகள் உருவாகி வருகின்றன.

விவசாயிகளின் இந்த முயற்சி, தென்னை நகரம் என்ற பெயரை பொள்ளாச்சி தக்க வைக்க உறுதுணையாக இருக்கும் என்பதில் மாற்றமில்லை.

## அதிக லாபம் பெறுவதற்கு தென்னையில் ஊடுபயிர் வேளாண்துறை ஆலோசனை

பரமக்குடி, தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் ஊடுபயிர் சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம், என பரமக்குடி உழவர் பயிற்சி மைய துணை இயக்குனர் உதுமான்முகைதீன் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது: தென்னந்தோப்பில் இரு மரங்கள் இடையே சுமார் 25 அடி இடைவெளி உள்ளது. இதில் வாழை, காய்கறிகள், கீரை, பயறு வகைகள் என ஊடுபயிராக பயிரிடலாம். இதன் மூலம் தென்னையில் மட்டுமின்றி ஊடுபயிர் மூலம் அதிக லாபம் பெற முடியும்.

தென்னையில் நல்ல மகசூல் பெற ஆண்டு தோறும் உரமிடுவது அவசியம். 5 ஆண்டுகள் நிறைவடைந்த தென்னைக்கு நன்கு மக்கிய தொழு உரம் 50 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 5 கிலோ, யூரியா 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ மற்றும் முரியட் ஆப் பொட்டாஷ் 3.5 கிலோ உரமிடுதல் அவசியம். மேலும் மரத்தை சுற்றி 4 அடி துாரத்தில் வட்ட வடிவில் ஒரு அடி ஆழத்தில் குழி வெட்டி அதில் மக்கிய தொழு உரம், வேப்பம் புண்ணாக்கு இட்ட பின் அதன் மீது உரங்களை இட்டு மண்ணால் மூடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இதன் மூலம் அதிக காய்கள் உருவாகி நல்ல மகசூல் கிடைக்கும், என்றார்.

## சின்ன வெங்காயம் சாகுபடியில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

கீழக்கரை உத்தரகோசமங்கை அருகே மேலச்சீத்தை, கீழச்சீத்தை, களரி, ஆனைகுடி உள்ளிட்ட இடங்களில் அதிகளவு மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மிதமான சாரல் மழையும், அதிக பனிப்பொழிவும், குறைவான வெப்ப சீதோஷண நிலையும் சின்ன வெங்காயம், மல்லி செடிகளுக்கு ஏற்றதாகும். மிளகாய் சாகுபடி

செய்யப்பட்ட நிலத்தின் வரப்புகளில், மட்டுமே இவை வளர்க்கப்படுகிறது.

விவசாயி பாலகுரு கூறுகையில், கடந்த வாரம் பெய்த லேசான மழையை பயன்படுத்தி மிளகாய் நடவு செய்யப்பட்டுள்ளது. ஒரு மாதம் முன்பே வெங்காயம், கொத்தமல்லி சாகுபடி செய்யப்படுகிறது. இவ்வகை செடிகளுக்கு தண்ணீர் தேங்கக்கூடாது. ஒரு கிலோ சின்ன வெங்காயம் நடவு செய்தால் 10 கிலோ மகசூல் கிடைக்கும். வீட்டு தேவைக்கு போக மீதமுள்ளவற்றை ராமநாதபுரம் பஜாரில் விற்று விடுவோம், என்றார்.

**உத்தரகோசமங்கை பகுதியில் கருவாச்சி ரக நெல் சாகுபடி**

கீழக்கரை உத்தரகோசமங்கை, நல்லாங்குடி, அரியகுடி, பனைக்குளம், புக்குளம் ஆகிய பகுதிகளில் கருவாச்சி ரக நெல் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

பச்சை பசேல் என்ற வயல்வெளியில், கருவாச்சி ரக நெற்பயிர் மட்டும் கருமை கலந்த பழுப்பு நிறத்தில் உள்ளது. இந்த நெல் சாகுபடி செய்யப்பட்ட இந்த வயல்களில் களைச்செடிகள் பசுமையாக வளர்ந்திருப்பது பார்த்தவுடன் தெரிகிறது. இந்த நெல்லின் இதன் பூர்வீகம் தஞ்சாவூர். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியில் அறிமுகம் ஆனது. விதை நெல் கிடைப்பது மிக அரிதான நிலையில், தற்போது படிப்படியாக உற்பத்தி பெருக்கத்தால் விதை நெல் எளிதாக கிடைக்கிறது. நல்லாங்குடி விவசாயி எம்.துரைராஜ் கூறுகையில், கருவாச்சி ரக நெல்லில் இருந்து பழுப்பு நிற சம்பா மட்டை அரிசி கிடைக்கிறது.

அதிக வறட்சியை தாங்கி வளரக்கூடியது. எளிதாக களை எடுக்கலாம். விதை நெல் மூடை 900 ரூபாய்க்கு விலைக்கு வாங்குகிறோம். ஏக்கருக்கு 30 கிலோ விதைத்தால் 30 மூடை

வரை கிடைக்கும். எதிர்பார்த்த மழை பெய்தால் நல்ல மகசூல் ஈட்டலாம், என்றார்.

வேளாண் துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், கருவாச்சி என்ற ரகத்தை விவசாயிகளுக்குள் பரிமாற்றம் செய்து கொள்கின்றனர். சான்று பெற்ற நெல்லாக இன்னும் அங்கீகரிக்கவில்லை. இனி வருங்காலங்களில் இதுகுறித்து தொழில்நுட்ப ஆய்வு மேற்கொண்டு நெல் சாகுபடியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

**ராமநாதபுரம் இறால்களுக்கு வெளிநாடுகளில் கிராக்கி**

ஆர்.எஸ்.மங்கலம், ராமநாதபுரம் பண்ணைகளில் வளரும் இறால்களுக்கு வெளிநாடுகளில் கிராக்கி ஏற்பட்டுள்ளதால் அதிகளவு ஏற்றுமதியாகின்றன.
தொண்டி, காரங்காடு, திருப்பாலைக்குடி, தேவிபட்டினம், சம்பை உட்பட பல்வேறு பகுதிகளிலும் அதிகளவில் இறால் பண்ணைகள் உள்ளன. பொதுவாக மார்ச் முதல் அக்டோபர் வரை இறால் வளர்ப்பிற்கு ஏற்ற பருவ நிலை உள்ளதால் இந்த மாதங்களில் அதிகளவு இறால் வளர்க்கப்படுகிறது.
இந்நிலையில், நவ., முதல் பிப்., வரை நிலவும் கடும் குளிர், தொடர் மழை உள்ளிட்ட பருவ நிலையால் இந்த மாதங்களில் இறால் வளர்ச்சி தடைபடும் என்பதால் அதிகளவு இந்த மாதங்களில் விவசாயிகள் இறால் வளர்ப்பதில்லை.

ஆனால், இந்த மாதங்களில் இறாலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயரும் என்பதால் ஒரு சில விவசாயிகள் இந்த பருவத்தில் இறால் வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

பொதுவாக ராமநாதபுரம் மாவட்டத்தில் வளர்க்கப்படும் சுவை மிகுந்த வனாமி வகை இறால்களுக்கு அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகளில் மவுசு அதிகம். தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அதிகளவில் இந்த நாடுகளுக்கு இறால் ஏற்றுமதியாகிறது.

பட்டுக்கோட்டை வியாபாரி ஒருவர் கூறுகையில், இங்கு வளர்க்கப்படும் வனாமி வகை இறால்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் கிராக்கி ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் திருப்பாலைக்குடி பகுதியில் ஒரு சிலர் மட்டுமே தற்போது இறால் வளர்த்து விற்பனை செய்வதால் கிலோ 350 ரூபாய் வீதம் சுமார் 3,500 கிலோ மொத்தமாக வாங்கியுள்ளேன். இவற்றை பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பஉள்ளேன், என்றார்.

**கால்நடைகளுக்கு இரையாகும் நெற்பயிர்**

கடலாடி, மழையின்றி கருகிய நெற்பயிரை கால்நடைகளுக்கு இரையாக்கி வருகின்றனர். கடலாடி, மங்களம் உள்ளிட்ட கிராமங்களில் மழையின்றி கருகிய நெற்பயிரை விவசாயிகள் ஆடு, மாடுகளுக்கு இரையாக்குகின்றனர். இப்பகுதியில் 120 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர் வீணாகியது. கடந்த அக்டோபர் மாதம் விதைக்கப்பட்ட நெல்லுக்கு 20 முதல் 30 நாட்களுக்குள் நிலத்தில் போதிய அளவு ஈரப்பிடிப்பு இருக்க வேண்டும்.

ஆனால், பெயரளவிற்கு பெய்த மழையால் நெல் விவசாயம் விவசாயிகளுக்கு கைகொடுக்காமல் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. விவசாயி குருசாமி கூறுகையில், சம்பா நெல் பயிரிட்டுள்ளோம். போதிய நீர் இல்லாததால், நெற்பயிர்கள் வளர்ச்சி குன்றியது.

கருகிய பயிரால் பயனில்லை என்பதால், மேய்ச்சலுக்கு செல்லும் ஆடு, மாடுகளை நெல் வயலில் இரையாக வழங்கிவிட்டோம், என்றார். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

**திருப்புவனம் பிரமனூர் கால்வாயில் ஆகாயத்தாமரை..ஆக்கிரமிப்பு. பெயரளவிற்கு நடக்கும் தூர்வாரும் பணி**

திருப்புவனம், திருப்புவனம் அருகே பிரமனூர் வரத்துக்கால்வாயில் ஆகாயத்தாமரை படர்ந்து தண்ணீர்

செல்லவே வழியில்லாத நிலையில் வெள்ளக்கால்வாயை தூர் வாரி அரசு நிதியை பொதுப்பணித்துறையினர் வீணடிப்பதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.
மதுரை விரகனூர் மதகு அணையில் இருந்து வலது மற்றும் இடது பிரதான கால்வாய்கள் மூலம் கண்மாய்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. பொதுப்பணித்துறை வசம் உள்ள இந்த கால்வாய்களை நிதி ஆதாரத்தின் இருப்பிற்கு ஏற்ப பொதுப்பணித்துறை தூர் வாரும் பணியை மேற்கொள்ளும்.
ஒரு சில கிராம விவசாயிகள் தங்களாகவே பணம் வசூலித்து தூர் வாரும் பணியையும் மேற்கொள்வார்கள்.

திருப்புவனம் அருகே பிரமனூர் கண்மாய் 725 ஏக்கர் பரப்பளவு உள்ளது. இதனை நம்பி வாடி கிராமம், வயல்சேரி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 750 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தட்டான்குளம் வைகை ஆற்று பகுதியில் இருந்து பிரமனூர் கண்மாய்க்கு 7 கி.மீ., தூரத்திற்கு பாசன கால்வாய் உள்ளது.

திருப்புவனம் நகர்பகுதி வழியாக வரும் இந்த கால்வாய் சமீப காலமாக தூர் வாரப்படாததால் நகரின் அனைத்து சாக்கடை கழிவு நீர் சங்கமிக்கும் இடமாக மாறி விட்டது. மேலும் கால்வாய் முழுவதும் ஆகாயத்தாமரை படர்ந்து கால்வாய் தெரியாத அளவிற்கு மறைத்துள்ளது.
மழை காலங்களில் பல்வேறு பகுதிகளில் இருந்து வெளியேறும் மழை நீர் கால்வாய் வழியாக கண்மாய்க்கு வரும்.
ஆகாயத்தாமரை படர்ந்து இருப்பதால் கண்மாய்க்கு மழை நீர் வருவதும் தடைபட்டுள்ளது.
பொதுப்பணித்துறையினரிடம் கால்வாயை தூர் வார பலமுறை விவசாயிகள் வலியுறுத்தியும் நடவடிக்கை எடுக்காமல் பிரமனூர் கண்மாய் நிரம்பி கண்மாய் உடையும் அளவிற்கு தண்ணீர் நிரம்பும் போது தண்ணீரை வெளியேற்ற வெள்ளக் கால்வாய் உள்ளது.

பிரமனூர் கண்மாயில் இருந்து 2 கி.மீ., துாரத்தில் உள்ள கிருதுமால் நதியில் அந்த வெள்ளக்கால்வாய் இணைகிறது. வரத்துகால்வாயை துார்வாராமல் பொதுப்பணித்துறையினர் வெள்ளக்கால்வாயை 5 லட்ச ரூபாய் செலவில் துார் வாரி வருகின்றனர்.

விவசாயிகள் சிலர் கூறுகையில், வரத்துக்கால்வாயை துார்வாரினால் எங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இது தொடர்பாக நாங்கள் கலெக்டரிடம் மனு கொடுத்துள்ளோம்.ஆனால் அதிகாரிகள் வெள்ளக்கால்வாயை துார்வாரி வருகின்றனர். வெள்ளக்கால்வாய் இரண்டரை மீட்டர் அகலம், 2 கி.மீ., துாரம் கொண்டது. கடந்த 10 ஆண்டுகளில் இதுவரை கண்மாய் நிரம்பவே இல்லை.வெள்ளக்கால்வாயில் தண்ணீர் சென்றதே இல்லை. தற்போது பொதுப்பணித்துறை ஏன் துாரெடுக்கிறது என தெரியவில்லை.

அரசு நிதியை பொதுப்பணித்துறை அதிகாரிகள் வீணடிப்பதை மாவட்ட நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை. வரும் காலங்களிலாவது பொதுப்பணித்றை நிதியை விவசாயிகளுக்கு பயனுள்ளதாக செலவழிக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் கோரிக்கையாகும்


**விவசாயிகளுக்கு மேம்பாட்டு பயிற்சி**

வத்திராயிருப்பு வத்திராயிருப்பு அருகே இலந்தைக்குளத்தில் நடந்த இப்பயிற்சிக்கு வேளாண்மை விரிவாக்க சீரமைப்பு திட்ட துணை இயக்குனர் பாலமுருகன் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் பாண்டித்துரை முன்னிலை வகித்தார்.

தொழில்நுட்ப மேலாளர் வனஜா வரவேற்றார். கால்நடை டாக்டர் திருமாறன் பேசினார். தெரசா மகளிர் சங்க செயலாளர் சிவகாமி பயிற்சியளித்தார். ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப

மேலாளர்கள் ஜான்பாண்டியன், சுதாசந்திரா செய்தனர். சங்க நிர்வாகி ஆயிஷாபேகம் நன்றி கூறினார்.

## மணிக்கு 130 கி சென்னையை வீசும் காற்று பலத்த வேகத்தில் .மீ. வாய்ப்பு பெய்ய மழை பலத்த புயல் அச்சுறுத்தும்




புதிதாக உருவாகும் புயல், சென்னையை தாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மணிக்கு 130 கி.மீ. வேகத்தில் காற்று வீசுவதுடன், மிக பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை நேற்று வரை பொய்த்து போன நிலையில் உள்ளது. ‘நாடா’ புயலும் ஏமாற்றிவிட்டது.

வார்தா புயல்

இருப்பினும், வரும் நாட்களில் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் பொதுமக்கள் உள்ளனர். இந்த நிலையில் வங்க

கடல் பகுதியில் உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 2 நாளில் புயலாக மாறுகிறது.

இதற்கு 'வார்தா' புயல் என்று பெயரிடப்படும். இந்த புயல், முதலில் நாளை (வெள்ளிக்கிழமை) அந்தமான்–நிகோபார் தீவுகளைத்தான் தாக்கும்.

25 செ.மீ. மழை

அங்கு மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசும். மொத்தம் 25 செ.மீ. மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும். நிலச்சரிவு, மின்சார துண்டிப்பு உள்ளிட்ட அசம்பாவிதங்களும் உருவாக வாய்ப்புள்ளது.

அந்தமான்–நிகோபார் தீவுகளை தாக்கிய பிறகு, இந்த புயல், சென்னையும், ஆந்திர கடலோர பகுதியும் அமைந்துள்ள கிழக்கு இந்தியா நோக்கி நகருகிறது. 11–ந் தேதி வாக்கில் (ஞாயிற்றுக்கிழமை) 'வார்தா' புயல், சென்னைக்கும், ஆந்திர மாநிலத்தின் விசாகப்பட்டினத்துக்கும் இடையே கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது, மணிக்கு 130 கி.மீ. வேகத்தில் பலத்த காற்றுடன் மழை பெய்யக்கூடும்.

சென்னைக்கு ஆபத்து

100 கி.மீ. தொலைவு வரை உள்ள இடங்களிலும் காற்றின் வேகம் அதிகமாக இருக்கும். இந்த பலத்த காற்று காரணமாக, மின் கம்பங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு சேதம் ஏற்படக்கூடும்.

'வார்தா' புயலால், சென்னையில் 11–ந் தேதியும், 12–ந் தேதியும் மிக பலத்த மழை பெய்யும் என்று தெரிகிறது. சென்னை மட்டுமின்றி, ஆந்திர மாநிலத்தின் நெல்லூர், ஓங்கோல், காக்கிநாடா, விசாகப்பட்டினம் ஆகிய ஊர்களிலும் புயலின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்று வானிலை ஆராய்ச்சி நிபுணர் ஆடம் டவுட்டி தெரிவித்தார்.

‘புயல் செல்லும் பாதையில் நிச்சயமற்ற தன்மை காணப்பட்டபோதிலும், சென்னை முதல் ஆந்திர மாநிலத்தின் பிரம்மபூர் வரை உள்ள மக்கள் நிலைமையை கண்காணித்து வர வேண்டும்’ என்று அவர் கூறினார்.

இந்த புயல் காரணமாக, விசாகப்பட்டினம், மசூலிப்பட்டினம் உள்ளிட்ட துறைமுகங்களில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டும், காக்கிநாடா உள்ளிட்ட துறைமுகங்களில் 5–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டும் ஏற்றப்பட்டுள்ளது.

<u>எஸ்.பாலச்சந்திரன்</u>

இதற்கிடையே, இந்த புயல் குறித்து சென்னை வானிலை மைய இயக்குனர் எஸ்.பாலச்சந்திரன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:–

தென் கிழக்கு வங்க கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகி உள்ளது. அது விசாகப்பட்டினத்தில் இருந்து தென் கிழக்கில் 1,180 கிலோமீட்டர் தூரத்தில் மையம் கொண்டிருக்கிறது. அந்த மண்டலம், வடமேற்கு திசையில் நகர்ந்து வலுப்பெற்று, அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறுகிறது. ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேலும் வலுப்பெற்று அதற்கடுத்த 24 மணி நேரத்தில் (நாளை காலை 8.30 மணிக்குள்) புயலாக மாறுகிறது.

இதன் விளைவாக, அடுத்த 24 மணி நேரத்தில், அந்தமான்–நிகோபார் தீவுகளின் சில இடங்களில் பலத்த மற்றும் மிக பலத்த மழை பெய்யக்கூடும். அந்தமான் தீவு மற்றும் வடக்கு ஆந்திராவை ஒட்டிய கடல் பகுதிகளில், கடல் கொந்தளிப்பாக காணப்படும். எனவே, மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம்.

அந்த புயல், தமிழ்நாட்டை நோக்கி வருகிறதா? என்பதையும், அது நகரும் பாதையையும் கண்காணிக்கிறோம்.

இன்று தமிழகத்தில் மழை பெய்யும்

மேலும் தென் தமிழக கடலோர பகுதிகளில் காற்று மண்டலத்தில் மேல் அடுக்கு சுழற்சி உருவாகி உள்ளது. இதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று (வியாழக்கிழமை) சில இடங்களில் மிதமான மழை பெய்யும். சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு எஸ்.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்

புயல் உருவாகி வருவதை மீனவர்களுக்கு அறிவிக்கும் வகையில், தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டு உள்ளது.

எண்ணூர் காமராஜர் துறைமுகத்தில் நேற்று முன்தினம் இரவு 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டு உள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுவடையும்போது கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்பதால், மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டு உள்ளனர்.

தூத்துக்குடி மீன் மார்க்கெட்

தூத்துக்குடியில், புயல் எச்சரிக்கை காரணமாக விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் 250 விசைப்படகுகள் உள்ளன. இந்த படகுகள் மூலம் தினமும் மீனவர்கள் கடலுக்குச் சென்று சுமார் ரூ.2 கோடி அளவுக்கு மீன்களை பிடித்துக்கொண்டு கரைக்கு திரும்புவர். இந்த மீன்கள் தூத்துக்குடி மார்க்கெட்டில் விற்பனைக்கு கொண்டு வரப்படும்.

கேரளா மற்றும் வெளி மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் இங்கு வந்து குவிந்து மீன்களை வாங்கிச் செல்வர். இதனால்

தூத்துக்குடி மீன் மார்க்கெட் தினமும் காலை முதல் மாலை வரை நெரிசலாக காணப்படும்.

<u>கடலுக்கு செல்லவில்லை</u>

இந்த நிலையில் கடந்த வாரம் நாடா புயல் காரணமாக வானிலை மையம் எச்சரிக்கை விடுத்ததால் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. தூத்துக்குடி துறைமுகத்திலும் 3–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டு இருந்தது. அப்போது மாநிலத்தின் பல்வேறு இடங்களில் மழை பெய்தபோதிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் மழை பெய்யவில்லை.

ஆனாலும் கடலில் அலைகளின் சீற்றம் அதிகமாக இருந்தது. மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் இருந்தனர். மார்க்கெட்டுக்கு மீன்கள் வரத்து இல்லாததால் வெறிச்சோடி காணப்பட்டது. இதனால் 3 நாட்களில் மீனவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் பலகோடி ரூபாய் வருமானம் இழப்பு ஏற்பட்டது.

புயல் கரையை கடந்ததை தொடர்ந்து, கடந்த 3, 5–ந் தேதிகளில் மீண்டும் மீனவர்கள் கடலுக்கு சென்று வந்தனர். மார்க்கெட்டுக்கு மீன்கள் வரத்து இருந்தது. அய்யப்பன் கோவில் சீசன் தொடங்கி உள்ளதை தொடர்ந்து வியாபாரிகள் வருகை குறைவாகவே இருந்தது.

<u>வெறிச்சோடிய மார்க்கெட்</u>

இந்த நிலையில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா மரணம் அடைந்ததையொட்டியும், தற்போது புதிய புயல் எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாலும் நேற்று முன்தினம் முதல் மீண்டும் விசைப்படகுகள் கடலுக்கு செல்லாமல் நிறுத்தப்பட்டன. மீன்பிடி துறைமுகத்தில் அனைத்து விசைப்படகுகளும் நிறுத்திவைக்கப்பட்டு உள்ளன.

3 நாட்கள் துக்கம் அனுசரிக்கும் வகையில் இன்றும் (வியாழக்கிழமை) படகுகள் கடலுக்கு செல்லாது என்று

அறிவிக்கப்பட்டு உள்ளது. இதனால், தூத்துக்குடி மீன் மார்க்கெட் வெறிச்சோடி காணப்படுகிறது.

## 50 சதவீத மழைப்பொழிவு பற்றாக்குறை; குளங்கள், கிணறுகள் வறண்டன உணவு மாவட்டம் திண்டுக்கல் பிடியில் வறட்சியின் : ஏற் தட்டுப்பாடுபடும் அபாயம்



மாதம் மும்மாரி பெய்த காலமெல்லாம் மலையேறி போய் விட்டது. தற்போது தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை காலத்தில் கூட போதிய மழை பெய்வதில்லை. காடுகளை அழித்து வீடுகளாக்குவதாலும், மரங்களை வெட்டுவதாலும் மழைப்பொழிவு அரிதாகி வருகிறது. நம் முன்னோர் கணித்து வைத்திருந்த கால நிலைகளும் மாறுபட தொடங்கி உள்ளது. வெயில் காலம் அதிகரிப்பது, காலம் தவறி மழைப்பொழிவது போன்றவை இதற்கு உதாரணமாகும். இதுபோன்ற காலநிலை மாறுபாடு விவசாயத்தை கடுமையாக பாதித்துவிட்டது.

### 50 சதவீதம் பற்றாக்குறை

கடந்த ஆண்டு தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருமழை கொட்டி தீர்த்தது. குறிப்பாக, கடலோர மாவட்டங்களில் கடும் வெள்ளம் ஏற்பட்டது. இந்த வெள்ளம் பல உயிர்களையும் காவு வாங்கியது. சில இடங்களில் பயிர்களை வெள்ளம் அடித்து சென்றது. உள்

மாவட்டங்களில் பெய்த மழை விவசாயம் செழிக்கவும் கை கொடுத்தது. ஆனால், இந்த ஆண்டு நிலைமை மாறிவிட்டது. மழை எப்போது பெய்யும் என்ற ஏக்கம் அனைவரிடமும் துளிர்த்து உள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தை பொறுத்தவரை, ஒவ்வொரு குளிர் பருவத்திலும் சராசரியாக 44.7 மில்லி மீட்டர் மழை பெய்வது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு ஒரு மில்லி மீட்டர் (0.67 மி.மீ. மட்டுமே பெய்தது) அளவுக்கு கூட மழை பெய்யவில்லை. இதே போல, 155.1 மில்லி மீட்டர் மழை பெய்ய வேண்டிய கோடை பருவத்தில் 86.74 மில்லி மீட்டர் மட்டும் மழை பொழிந்தது.

தென்மேற்கு பருவ காலத்தில் 218.3 மில்லி மீட்டர் சராசரியாக மழை பெய்யும். ஆனால், இந்த ஆண்டு 136.46 மில்லி மீட்டராக மழை அளவு குறைந்துவிட்டது. வடகிழக்கு பருவமழையில் மொத்தம் 417.9 மில்லி மீட்டர் மழை பெய்ய வேண்டும். ஆனால், இதுவரை வெறும் 230.39 மில்லி மீட்டர் மட்டுமே பெய்துள்ளது. இந்த பருவம் முடிய இன்னும் 3 வார காலங்கள் மட்டுமே உள்ளன. இந்த ஆண்டு முழுவதும் பெய்ய வேண்டிய மழை அளவில் சுமார் 50 சதவீதம் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது.

வறட்சியின் பிடியில்...

வருண பகவான் கைவிரித்ததால், விவசாயத்துக்கு பெயர்போன திண்டுக்கல் மாவட்டம் வறட்சியின் பிடியில் சிக்கி தவிக்கிறது. வழக்கமாக வடகிழக்கு பருவத்தில் மும்முரமாக நடக்கும் விவசாயம் தற்போது முடங்கி போய்விட்டது, பலரையும் வேதனை அடைய செய்து உள்ளது. இந்த பருவத்தில் அனைத்து அணைகள், குளங்கள், கிணறுகள் நிரம்பி இருக்கும். எங்கும் செழுமை கண்ணுக்கு குளிர்ச்சி தரும். தற்போது, அனைத்தும் வறண்டு கிடக்கின்றன. நிலத்தடி நீர் அதலபாதாளத்துக்கு சென்றுவிட்டது. குடிநீருக்கே ஆங்காங்கே தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

இந்த பருவமழை பொய்த்ததால் விவசாயம் கடுமையான சவாலை எதிர்கொண்டு வருகிறது. இதனால், சாகுபடி பரப்பளவும் சொற்ப அளவாக சுருங்கிவிட்டது. அதாவது, மாவட்டம் முழுவதும் 16 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி நடைபெறும். ஆனால், தற்போது வெறும் 1,166 ஹெக்டேர் பரப்பு மட்டுமே நெல் விவசாயம் நடக்கிறது.

சுருங்கி போன சாகுபடி பரப்பு

இதே போல, 69 ஆயிரத்து 300 ஹெக்டேர் பரப்பளவில் நடக்கும் சிறுதானிய சாகுபடி, தற்போது 59 ஆயிரம் ஹெக்டேராக சுருங்கிவிட்டது. 29 ஆயிரம் ஹெக்டேர் பரப்பு பயறு வகைகள் சாகுபடி, 27 ஆயிரம் ஹெக்டேராகவும், 3 ஆயிரத்து 500 ஹெக்டேர் பரப்பு கரும்பு சாகுபடி, 2 ஆயிரத்து 300 ஹெக்டேராகவும், 16 ஆயிரத்து 400 ஹெக்டேர் எண்ணெய் வித்துகள் சாகுபடி, வெறும் 3 ஆயிரத்து 800 ஹெக்டேராகவும் குறைந்துவிட்டன. மொத்தத்தில் 1 லட்சத்து 40 ஆயிரம் ஹெக்டேர் பரப்பு நடக்க வேண்டிய சாகுபடி, வெறும் 97 ஆயிரம் ஹெக்டேரில் முடங்கிவிட்டது.

தற்போது நடைபெறும் சாகுபடியும், கடந்த நவம்பர் மாதம் தொடக்கத்தில் பெய்த மழையை நம்பி விவசாயிகள் தொடங்கியது. ஆனால், அதற்கு பிறகு மழை பொய்த்துவிட்டது. இதனால் பயிர்கள் அனைத்தும் கருகி வருகின்றன. இதனால் என்ன செய்வது என தெரியாமல் விவசாயிகள் திகைத்து போய் உள்ளனர்.

உணவு தானிய உற்பத்தி பாதிப்பு

பயிர்கள் கருகி வருவது, சாகுபடி பரப்பு சுருங்கியது போன்றவை உணவு தானிய இலக்கை கடுமையாக பாதிக்கும் சூழல் ஏற்பட்டு உள்ளது. இந்த ஆண்டு திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்தம் சுமார் 6 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. அதாவது, 93 ஆயிரம் மெட்ரிக் டன் நெல், 4 லட்சத்து 85 ஆயிரம் மெட்ரிக் டன் சிறுதானியங்கள்,

20 ஆயிரம் டன் பயறு வகைகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

இந்த கடுமையான வறட்சியில் இலக்கை எட்டுவது என்பது மாபெறும் சாவாலாகும். திண்டுக்கல் மாவட்டம் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் உணவு தானிய உற்பத்தி கடுமையான சரிவை சந்திக்கும் நிலை ஏற்பட்டு உள்ளது. குறிப்பாக, நெல் உற்பத்தி கடுமையாக பாதிக்கும் என தெரிகிறது.

இவ்வாறு உணவு தானிய உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டால், வருகிற ஆண்டுகளில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகும். இந்த அபாயம் நீங்க எஞ்சிய நாட்களில் நன்கு மழை பொழிய வேண்டியது அவசியமாகி இருக்கிறது. இதற்கு வருண பகவான் பகவான் கருணை காட்டுவாரா? என்பதை பார்க்கலாம்.

<u>வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்படுமா?</u>

கடும் வறட்சியை கருத்தில் கொண்டு, திண்டுக்கல்லை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வருகிறார்கள். இது குறித்து அதிகாரிகளிடம் கேட்டபோது, ‘வறட்சி மாவட்டமாக அறிவிப்பது குறித்து முடிவு எடுக்க நாட்கள் உள்ளன. அதாவது, டிசம்பர் மாதம் இறுதி வரை வடகிழக்கு பருவமழை காலம் இருப்பதால், அதன்பிறகே முடிவு செய்யப்படும். மழைப்பொழிவு, விவசாயத்தில் ஏற்பட்ட பாதிப்பு போன்றவற்றை ஆய்வு செய்து அறிவிப்பு வெளியிடப்படும். இந்த முறை திண்டுக்கல்லை வறட்சி மாவட்டமாக அறிவிக்க அதிக வாய்ப்புகள் உள்ளன’ என்றனர்.

<u>பயிரை காப்பாற்ற என்ன வழி?</u>

திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் தங்கச்சாமி கூறியதாவது:–

போதிய மழைப்பொழிவு இன்றி, மாவட்டம் முழுவதும் தற்போது வறட்சி நிலவுகிறது. இதனால் ஏற்கனவே சாகுபடி செய்திருக்கும்

நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள் போன்ற பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. இந்த பயிர்களை காப்பாற்ற 2 வழிமுறைகள் உள்ளன. அதன்படி, ஒரு ஹெக்டேர் பரப்புக்கு, 2 கிலோ பொட்டாசியம் குளோரைடை 200 லிட்டர் தண்ணீரில் கலக்கி, கைவிசை பம்பு மூலம் பயிர்களுக்கு தெளிக்க வேண்டும். மற்றொரு வழிமுறைப்படி, பி.பி.எப்.எம். எனப்படும் மீத்தைலோ ட்ரப் 200 மில்லி லிட்டர் எடுத்துக்கொள்ள வேண்டும். இதை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பயிர்களுக்கு தெளிக்கலாம். இதன் மூலம் பயிர்களை 10 முதல் 15 நாட்கள் வரை தண்ணீரின்றி பாதுகாக்க முடியும். இந்த வழிமுறைகளின்படி பயிர் மற்றும் நிலத்தில் உள்ள ஈரப்பதம் ஆவியாவது தடுக்கப்படும். இதனால் பயிர்களுக்கு வறட்சியை தாங்கும் சக்தி கிடைக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.